
# உரைநடைத்தமிழ் நோக்கும் போக்கும்









**தமிழ் ஐயா வெளியீட்டகம்**
ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உரைநடைத் தமிழ்<br>நோக்கும் போக்கும் |
| வகை | : | உரைநடைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி (04362 - 260711) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2047<br>(சூலை, 2016) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம்,<br>திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-6 (V-1) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 488 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு)<br>சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம்,<br>சென்னை |


கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம் 23-07-2016 அன்று நடத்திய அனைத்துலக அளவிலான உரைநடைத் தமிழ் 14-ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல் ஆகும்.

54. திரு.வி.க வின் பன்முகப் பார்வை
அ. கிரேசிசெனோவா 311

55. தமிழ் தாத்தா உ.வே.சா.
முனைவர் கு.ச. செயசிறி 317

56. மு. இராகவையங்காரின் மருத்துவ உரைத்திறன்
ந.கே. கோமதி 322

57. திரு.க. வின் உரைத்திறன்
முனைவர் சி. சொர்ணமாலா 327

58. திரு.வி.க. வின் பெண்ணின் பெருமை உரைநடை, நயம்
முனைவர் சா. கிரிசா 332

59. திரு.வி.க.வின் பெண்ணின் பெருமை ஒரு பேசும் சித்திரம்
பா. செல்வி 338

60. மறைமலை அடிகளின் உரைத்திறன்
க. ரேவதி 344

61. வ.உ.சி யின் உரைநடைத் தமிழ்
மீனாட்சி சரவணன் 349

62. செந்தமிழ் இதழில் மு. இராகவையங்காரின் உரைநடைத் தமிழ்
ச. காளிதாசன் 355

63. இரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புகள் ஓர் ஆய்வு
முனைவர் க. சசிகலா 359

64. இரா.பி. சேதுப்பிள்ளையின் நடைநயம்
முனைவர் ஆ.பாக்கியலட்சுமி 365

65. வ.உ.சி. யின் வாழ்க்கை வரலாறும், படைப்புகளும், உரைச்சிறப்பும்
க. கெலன் 370

66. இரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழகம் ஊரும் பேரும்
முனைவர் செ. சிவகாமி சுந்தரி 377

67. தமிழுக்கெனத் தன்னையே செதுக்கிக் கொண்ட மாபெருஞ்சிற்பி மகாவித்துவான்
முனைவர் வாணிஅறிவாளன் 382

68. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் வாழ்வும் வரலாறும்
முனைவர் நா. கேமலதா 389

# 60. மறைமலை அடிகளின் உரைத்திறன்

க. ரேவதி
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

## முன்னுரை

தமிழ் இலக்கிய வானில் புகழோடு தோன்றி கடின உழைப்பால் உயர்ந்த சான்றோர்கள் பலர். அவர்களுள் தமிழ் மீது கொண்ட தணியாத ஆர்வத்தால் தன் பெயரை மாற்றியமைத்த பண்பாளர். ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்குத் தந்தவர். பண்மொழிப் புலமை பெற்ற மறைமலை அடிகளின் முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரையின் வழி அவரது உரைத் திறனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## உரையின் தேவை?

உரைநடையின் தோற்றம் தொல்காப்பியரின் காலத்திற்கு முன்பிருந்தே வந்துள்ளது.

"சூத்திரத் துட்பொரு என்றியும் யாப்புற
இன்றிய மையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே"
(தொல்.மரபியல்)

என்று தொல்காப்பியர் உரையின் இலக்கணத்தைத் தெளிவுப்படுத்தியுள்ளார். மறைமலை அடிகள் 1903ஆம் ஆண்டு கலை நூற் புலமை பயிலும் மாணவர்களுக்கு பாடமாக முல்லைப்பாட்டினை எடுத்தார். அப்போது மாணவர்களுக்கு எழுந்த இடர்ப்பாடு கண்டு அதனைக் களைய முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையினை எழுதினார்.

## உரையின் போக்கு

மறைமலை அடிகளின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையில் முதலில் பாட்டின் இயல்பினை



விவரிக்கின்றார். பாட்டின் இயல்பினை விளக்குவதற்கான காரணத்தைத் "தண்டமிழ்ப் புலவரோ பாட்டு என்பதன் இயல்வை நன்கறிந்து நலமுடைய செய்யுட்கள் பலப்பல இயற்றினார். இங்ஙனம் முற்காலத்தாரால் செய்யப்பட்ட பாட்டின் இயல்போடு மாறுபட்டுப் பிற்காலத்தார் உண்மை பிறழ்ந்து பாடிய செய்யுட்களைக் கண்டு மாணாக்கர் பாட்டினியல்பு அறியாது மயங்குவராகலிற் பாட்டு என்பது இன்னதென்பதனை ஒரு சிறிது விளக்குவாம்" என்று வினாவினை எழுப்பி விடை பகர்கின்றார். இவ்வாறுப் பாடலைப் படிக்கும் வாசகளுக்கு இயல்பாக எழும் ஐயங்களை வினாக்களாக எழுப்பி அதற்கு விடை கூறும் முகமாக உரையினை விளக்கிச் செல்கின்றார். முல்லைப் பாட்டின் விளக்கித்திற்கு முன்னதாக பாட்டு என்ற சொல்லின் பொருளை உணர்த்தியதிறன் போற்றுதற்குரியது.

## பன்னூல் புலமை

முல்லைப் பாட்டில் இயல்புகளை விளக்கிச் செல்லுமிடத்தில் உபந்தாங்களின் கருத்துக்கள், பாட்டின் நுட்பமுணர்ந்த உலகப்புலவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுச் செல்கின்ன்ற.

"பாட்டென்பது மக்கள் என அறிவினின்றும்
வடித்து இறக்கப்பட்ட தூய அமிழ்தம் ஆம்"
மில்டன்

என்ற விளக்கத்தினையும் தந்துள்ளார். வேதங்களின் விளக்கங்கையும் ஆங்காங்கே மேற்கோளாகப் பயன்படுத்தி விளக்கிச் செல்கிறார். தேவை ஏற்படும் இடங்களில் அவ்விலக்கிய கால வரலாற்றினையும் விளக்கியுள்ளார். சமயவரலாறு குறித்த விளக்கங்கள் இவரது உரையினின்று அறிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்களிலிருந்தும் செந்தமிழ் இலக்கியங்களில் இருந்தும் திருக்குறள் போன்ற நீதி நூல்கள், பிங்கலம், திவாகரம், நிகண்டு போன்ற அகராதி நூல்கள், சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்கள், நச்சினார்க்கினியர்,